
நூற்றாண்டு நாயகர் பாரத ரத்னா எல்.கே. அத்வானி

பிரதமர் நரேந்திர மோடி



எல்.கே. அத்வானி என்கிற லால் கிருஷ்ண அத்வானி ஞாயிற்றுக் கிழமை (நவ.8) தனது நூறாவது வயதில் அடியெடுத்து வைக்கிறார். நவீன இந்தியாவின் வரலாற்றில் பல்வேறு காலகட்டங்களில், வெகு சில ஆளுமைகள்தான் அழுத்தமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளனர்.

அத்வானி, 1927 நவம்பர் 8-ஆம் தேதி கராச்சியில் பிறந்தார். 1947-ஆம் ஆண்டு, தமது இளம் வயதில், சிந்துவில் தனக்குப் பழக்கமான வாழ்விடத்தையும் சூழலையும் விட்டுப் பிரிய வேண்டிய வேதனையை அவர் அனுபவித்தார். இருப்பினும், எவ்விதக் கசப்புணர்வும் இன்றி, பூஜ்ஜியத்திலிருந்து தனது வாழ்க்கையை மீண்டும் கட்டமைத்துக் கொண்டார்.

எத்தகைய சவால்களையும் எதிர்கொண்டு, அடிப்படையிலிருந்து ஒன்றை உருவாக்கும் இந்தப் பண்பு, அவரது வாழ்நாள் முழுவதும் தொடர்ந்து வெளிப்பட்டு வந்துள்ளது. ஜன சங்கத்தை வலுப்படுத்தியபோதும், பின்னர் பாரதிய ஜனதா கட்சியை உருவாக்கி வளர்த்தபோதும் இந்தப் பண்பு வெளிப்பட்டது.

அத்வானியை ஒரு தனித்துவமான தலைவராக, எப்போதும் அவரின் இரண்டு பண்புகள் அடையாளப்படுத்துகின்றன. முதலாவது, அவரது கொள்கைத் தெளிவும், அறிவுக்கூர்மையும்; அவரின் எழுத்துகளிலும், உரைகளிலும் இந்தப் பண்புகள் வெளிப்பட்டன. இரண்டாவது, இந்திய அரசியல் களத்தின் பெரும்பான்மையான பிரிவினரால் பல ஆண்டுகளாக முன்னெடுக்கப்பட்ட போலி மதச்சார்பின்மையை அவர் அம்பலப்படுத்திய விதம்.

தனக்கு ஒப்படைக்கப்பட்ட ஒவ்வொரு பொறுப்பையும் மிகுந்த அர்ப்பணிப்புடனும் கவனத்துடனும் அவர் நிறைவேற்றினார். ஆர்எஸ்எஸ் தொண்டராக தனது பணியைத் தொடங்கிய அவர், முதலில் ராஜஸ்தானின் பல்வேறு பகுதிகளில் பணியாற்றினார். அங்கிருந்து தலைநகர் தில்லிக்குச் சென்ற அவர், மூத்த தலைவர் வாஜ்பாயுடன் இணைந்து நெருக்கமாகப் பணியாற்றத் தொடங்கினார். இருவரும் இணைந்து இந்திய அரசியலின் போக்கையே மாற்றி அமைத்தனர்.

அத்வானியின் நாடாளுமன்றப் பயணம் 1970-ஆம் ஆண்டில் தொடங்கியது. நாடாளுமன்றத்தில் அவர் நிகழ்த்திய உரைகளும் முன்வைத்த கருத்துகளும் அனைத்துக் கட்சிகளையும் சேர்ந்த உறுப்பினர்களின் பாராட்டைப் பெற்றன. நாடாளுமன்ற உறுப்பினராகவும், பின்னர் மக்களவை, மாநிலங்களவை ஆகியவற்றின் எதிர்க்கட்சித் தலைவராகவும், ஆளுங்கட்சி உறுப்பினராகவும் அவர் தனித்துவமான முத்திரையைப் பதித்தார்.

அத்வானியின் வாழ்க்கையில் அவசர நிலைக் காலம் (1975-ஆம் ஆண்டு), ஒரு முக்கியத் திருப்புமுனையாக அமைந்தது. ஜனநாயகத்தைக் காப்பதிலும், அரசமைப்புச் சட்டத்தைப் பாதுகாப்பதிலும் அவர் முன்னிலை வகித்தார். அவசரநிலைக் காலத்தில் அவர் பெற்ற அனுபவங்கள், 'ஒரு கைதியின் குறிப்பேடு' என்ற அவரது நூலில் இடம்பெற்றுள்ளன.

அத்வானி சிறந்த எதிர்க்கட்சித் தலைவராகவும், நிர்வாகியாகவும் விளங்கினார். 1977-ஆம் ஆண்டு பிரதமர் மொரார்ஜி தலைமையில் ஜனதா கட்சி ஆட்சிப் பொறுப்பேற்றபோது, தக வல் மற்றும் ஒலிபரப்புத் துறை அமைச்சராக அத்வானி பொறுப்பேற்றார்; அதில் அவர் ஆற்றிய பணிகள் மிகுந்த தாக்கத்தை ஏற்படுத்தின.

துணைப் பிரதமராகவும், உள்துறை அமைச்சராகவும் பணியாற்றி, நாட்டின் பாதுகாப்புக்கட்டமைப்பைவலுப்படுத்துவதில் அவர் முக்கியப் பங்காற்றினார். பயங்கரவாதத்துக்கு எதிராக அவர் உறுதியான நிலைப்பாட்டை மேற்கொண்டதன் விளைவாக, இந்தியாவில் கடுமையான பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் கொண்டுவரப்பட்டது.

அத்வானியின் வாழ்க்கையில் வரலாற்றுச் சிறப்பு மிக்க நிகழ்வுகளில் ஒன்று, சோமநாதர் ஆலயத்திலிருந்து அயோத்தி வரை நடைபெற்ற ரத யாத்திரையாகும். இது, இந்தியச் சமூகத்தின் போக்கில் நேர்மறையான மாற்றத்தை ஏற்படுத்தியது. பல ஆண்டுகளுக்குப் பின், இந்திய மக்களின் ஆசியுடன், அயோத்தியில் பகவான் ஸ்ரீராமருக்கு பிரம்மாண்டமான ஆலயம் எழுப்பப் பட்டது.

அத்வானியைக் கௌரவிக்கும் வகையில், 2024-ஆம் ஆண்டு அவருக்கு நாட்டின் உயரிய விருதான பாரத ரத்னா வழங்கப்பட்டது. அத்வானி தனது 100-ஆவது வயதில் அடியெடுத்து வைக்கும் (நவ.8, 2026) இந்தச் சிறப்பான தருணத்தில், அவர் நல்ல உடல்நலத்துடன் நீண்ட காலம் வாழவும், எப்போதும் போல நம் அனைவருக்கும் தொடர்ந்து ஊக்கமளிக்கவும் இறைவன் அவருக்கு அருள்புரிய வேண்டும் என்று பிரார்த்திக்கிறேன்.

சி. சுப்பிரமணியம் நினைவு நாள்

குடியரசு துணைத் தலைவர் அஞ்சலி



விடுதலைப் போராட்ட வீரர் சி. சுப்பிரமணியத்தின் நினைவுநாளையொட்டி தில்லியில் உள்ள தனது மாளிகையில் அவரது உருவப் படத்திற்கு சனிக்கிழமை மலர் தூவி அஞ்சலி செலுத்திய குடியரசு துணைத் தலைவர் சி.பி.ராதாகிருஷ்ணன்.

நமது நிருபர்

புது தில்லி, நவ.7: சுதந்திரப் போராட்ட வீரர் சி.சுப்பிரமணியம் நினைவுநாளில் அவருக்கு குடியரசு துணைத் தலைவர் சி.பி.ராதாகிருஷ்ணன் சனிக்கிழமை அஞ்சலி செலுத்தினார்.

இது குறித்து தனது 'எக்ஸ்' தளத்தில் குடியரசு துணைத் தலைவர் சி.பி.ராதாகிருஷ்ணன் வெளியிட்ட பதிவில் கூறியிருப்பதாவது: 'பாரத ரத்னா' சி. சுப்பிரமணியத்தின் நினைவுநாளில், குடியரசு துணைத் தலைவர் மாளிகையில் அவரது உருவப் படத்துக்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தினேன்.

சுதந்திரப் போராட்ட வீரராகத் திகழ்ந்த அவர், சுதந்திரத்திற்குப் பிறகு தமிழக அரசிலும் மத்திய அரசிலும் பல்வேறு முக்கியப் பொறுப்புகளை வகித்து, சிறப்பான நிர்வாகப் பங்களிப்பை வழங்கினார். மத்திய அமைச்சராகவும், மகாராஷ்டிர ஆளுநராகவும் சிறப்பாகப் பணியாற்றினார். தியாகம், தூய்மை, தேசபக்தி ஆகிய உயரிய பண்புகளை அடிப்படையாகக் கொண்டு தனது நீண்ட நெடிய பொதுவாழ்வை அர்ப்பணித்தவர் சி.எஸ். இந்தியாவில் பசுமைப் புரட்சிக்கும் வெண்மைப் புரட்சிக்கும் வித்திட்டதில் அவரது பங்களிப்பு மகத்தானது. அவரது தொலைநோக்குப் பார்வையும் முயற்சிகளும் இந்தியாவின் உணவுப் பாதுகாப்புக்கும், பால் உற்பத்தியில் உலகின் முன்னணி நாடாக இந்தியா உயர்வதற்கும் வலுவான அடித்தளமிட்டன.

அவரது நினைவு நாளில், தேசத்தின் வளர்ச்சிக்காக அவர் ஆற்றிய அளப்பரிய பங்களிப்புகளை நன்றியுடன் நினைவுகூர்ந்து, அவருக்குப் புகழஞ்சலி செலுத்துவதில் பெருமை கொள்கிறேன் என அப்பதிவில் குடியரசு துணைத் தலைவர் சி.பி.ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் முன்னேற்றத்துக்கு ராமஜென்மபூமி இயக்கமே காரணம்

குடியரசு துணைத் தலைவர்

அயோத்தி, நவ.7: இந்தியா மற்றும் உத்தர பிரதேசத்தின் முன்னேற்றத்துக்கு ராமஜென்மபூமி இயக்கம்தான் காரணம் என்று குடியரசு துணைத் தலைவர் சி.பி.ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

உத்தர பிரதேச மாநிலம் அயோத்தியில் உள்ள சரயு நதிக்கரையில் 10-ஆவது தீப உற்சவ கொண்டாட்டங்களை, குடியரசு துணைத் தலைவர் சி.பி.ராதாகிருஷ்ணன் சனிக்கிழமை தொடங்கிவைத்தார். பின்னர் அவர் பேசியதாவது:

ஐந்நூறு ஆண்டுகளுக்குப் பின்னர் எண்ணற்ற ராம பக்தர்கள், துறவிகள், ஞானிகளின் தியாகங்களாலும் அர்ப்பணிப்பாலும், ராமரின் பிறப்பிடத்தில் பிரம்மாண்டமான ராமர் கோயிலை கட்டும் பணி சாத்தியமானது.

ராமர் பிறந்த இடத்தில், அவருக்காக எழுப்பப்பட்டுள்ள கோயிலை கண்டு மகிழும் பெருமையை நாம் பெற்றுள்ளோம். இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் வாழும் மக்களின் பங்களிப்பால், இந்தப் பிரம்மாண்ட ராமர் கோயில் சாத்தியமாகியுள்ளது.

தற்போது இந்தியாவும் உத்தர பிரதேசமும் முன்னேறி வருகின்றன. இந்த முன்னேற்றத்துக்கு ராமஜென்மபூமி இயக்கம்தான் காரணம். தற்போது வறுமையின் பிடியில் இருந்து நாடு முன்னேறியுள்ளது. சுமார் 2 சதவீத மக்கள் மட்டுமே வறுமை கோட்டுக்குக் கீழ் உள்ளனர்.

2047-க்குள் இந்தியா வளர்ச்சியடைந்த நாடாவதற்கு அறிவியல், புதுமையான கண்டுபிடிப்புகள், தொழில்நுட்பத்தின் வளர்ச்சியை ஏற்றுக்கொண்டு, அவற்றின் மூலம் கிடைக்கும் நன்மைகளைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அதே வேளையில் நமது விழுமியங்கள், மொழிகள், பாரம்பரியம், பண்பாடு உள்ளிட்டவற்றை நாம் கைவிடக்கூடாது என்று தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சியின்போது சரயு நதிக்கரையில் 30 லட்சத்துக்கும் அதிகமான அகல் விளக்குகள் ஏற்றப்பட்டு, அந்தப் பகுதியே ஒளி வெள்ளத்தில் ஜொலித்தது.

உ.பி.: காவல் துறை சோதனைச் சாவடி மீது வெடிகுண்டு தாக்குதல்; ஒருவர் காயம்

காஜியாபாத், நவ.7: உத்தர பிரதேச மாநிலம் காஜியாபாத்தில் காவல் துறை சோதனைச் சாவடி மீது வெள்ளிக்கிழமை நள்ளிரவு வெடிகுண்டு தாக்குதல் நடத்தப்பட்டது. இதில், அங்கு உணவு விநியோக நபர் காயமடைந்தார்.

இந்தத் தாக்குதலுக்கு 'தெஹ்ரிக் உல் முஜாஹிதீன்' பயங்கரவாத அமைப்பு பொறுப்பேற்றுள்ளது.

இது குறித்து போலீஸார் கூறியதாவது: காஜியாபாத் இந்திராபுரம் காவல் நிலையத்துக்குஉட்பட்ட வசுந்தரா காவல்சோதனைச் சாவடியில் இந்த வெடிகுண்டு தாக்குதல் நடத்தப்பட்டது. இதில், அங்கிருந்த உணவு விநியோக நபர் காயமடைந்தார். சோதனைச் சாவடியின் ஜன்னல் கண்ணாடிகள் சேதமடைந்துள்ளன. தாக்குதலின் பின்னணி குறித்து தீவிர விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.

இந்த தாக்குதலுக்கு 'தெஹ்ரிக் உல் முஜாஹிதீன்' பயங்கரவாத அமைப்பு பொறுப்பேற்று, தனது சமூக ஊடகப் பக்கத்தில் பதிவிட்டுள்ளது. இது குறித்தும் விசாரணை நடத்தப்பட்டு வருகிறது. வெடிகுண்டு நிபுணர்களும், தடயவியல் நிபுணர்களும் சம்பவ இடத்தில் தீவிர சோதனை மேற்கொண்டு வருகின்றனர். அந்தப் பகுதி கண்காணிப்புக் கேமரா காட்சிகளும் ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன என்றனர்.

சம்பவ இடத்தை ஆய்வு செய்த காஜியாபாத் காவல் ஆணையர் ஜே. ரவீந்திர கௌர் கூறுகையில், 'தாக்குதல் நடந்த சமயத்தில் சோதனைச் சாவடியில் காவல் உதவி ஆய்வாளரும், ஓர் உணவு விநியோக நபரும் இருந்துள்ளனர். தாக்குதலில் உணவு விநியோக நபர் காயமடைந்துள்ளார். அனைத்து ஆதாரங்களும் சோகரிக்கப்பட்டுள்ளன. பயங்கரவாத தாக்குதல் உள்பட அனைத்து கோணங்களிலும் விசாரணை நடத்தப்பட்டு வருகிறது' என்றார்.

மேற்கு வங்க எஸ்ஐஆர் தீர்ப்பாயம்: 4-ஆவது ஓய்வுபெற்ற நீதிபதி ராஜிநாமா

கொல்கத்தா, நவ.7: மேற்கு வங்க வாக்காளர் சிறப்பு தீவிர திருத்த (எஸ்ஐஆர்) தீர்ப்பாயங்களில் இருந்து தனிப்பட்ட காரணங்களுக்காக, ஓய்வு பெற்ற கொல்கத்தா உயர்நீதிமன்ற நீதிபதி விஸ்வஜித் பாசு ராஜிநாமா செய்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

அந்த தீர்ப்பாயங்களுக்குத் தலைவர்களாக 19 ஓய்வுபெற்ற நீதிபதிகள் நியமிக்கப்பட்ட நிலையில், ஏற்கெனவே கொல்கத்தா உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி டி.எஸ்.சிவஞானம், ஓய்வு பெற்ற நீதிபதிகள் ரஞ்சித் குமார் பாக், இந்திரஜீத் சாட்டர்ஜி ஆகியோர் ராஜிநாமா செய்தனர். தற்போது 4-ஆவதாக விஸ்வஜீத் பாசு ராஜிநாமா செய்துள்ளார்.

மேற்கு வங்கத்தில் எஸ்ஐஆரின் போது வாக்காளர் விவரங்களில் முரண்பாடுகள் உள்பட பல்வேறு காரணங்களால் சுமார் 91 லட்சம் பேர் வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டனர்.

இது குறித்த வழக்கை விசாரித்த உச்சநீதிமன்றத்தின் உத்தரவுக்கு இணங்கி, அந்த மாநிலத்தில் 19 எஸ்ஐஆர் மேல்முறையீட்டு தீர்ப்பாயங்களை தேர்தல் ஆணையம் அமைத்தது. இந்தத் தீர்ப்பாயங்கள் நீக்கப்பட்ட வாக்காளர்களின் மேல்முறையீடுகளை விசாரித்து வருகிறது.

பஞ்சாப் நேஷனல் வங்கி
punjab national bank

கடன் மீட்பு நிர்வாகக் கிளை (ARMB) : எண்.448A, டாக்டர் நஞ்சப்பா ரோடு, கோயம்புத்தூர் - 641 018. போன் : 0422 2231314, 0422-2231345, 9963993409. மின்னஞ்சல் : cs4371@pnb.bank.in

அசையாச் சொத்துக்களின் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு

அசையாச் சொத்துக்களின் விற்பனைக்கான மின் ஏலத்திற்கான பொது அறிவிப்பு : 26.11.2026 தேதி அன்று (காலை 11.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை)

முன்வைப்புத் தொகை மற்றும் ஆவணங்கள் சமர்ப்பிக்க கடைசித் தேதி மற்றும் நேரம் : 26.11.2026 தேதி அன்று, மாலை 3.00 மணி வரை

கடனீட்டு சொத்துக்கள் ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை மறு சீரமைத்தல் கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம், 2002, பிணையநலன் (அமலாக்கம்) விதிகள் 2002 ன் விதி 9(1) உடன் கீழ், அசையாச் சொத்துக்களின் விற்பனைக்கான மின்-ஏல விற்பனை அறிவிப்பு.

பஞ்சாப் நேஷனல் வங்கியின் (பாதுகாக்கப்பட்ட கடனீந்தவர்) அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்கள், மேற்படி வங்கிக்கு வரவேண்டிய கீழே குறிப்பிடப்பட்டுள்ள தொகையை, கீழே குறிப்பிட்டுள்ள கடன்தாரர்(கள்) மற்றும் உத்தரவாதமளித்தவர்(கள்) ஆகியோரிடமிருந்து வசூலிக்கும் பொருட்டு, கடன் வழங்கிய வங்கிக்குப் பிணையப்படுத்தப்பட்ட/ஈடுவைக்கப்பட்ட ஆக்கபூர்வ / கொள்நிலை / அடையாள சுவாதீனம் செய்து கொண்ட கீழ்க்கண்ட அசையாச் சொத்தினை கீழே அட்டவணையில் குறிப்பிட்டுள்ள தேதியில் விற்பனை செய்பவள்ளார் என்பதை குறிப்பாக கடன்தாரர்(கள்) மற்றும் உத்தரவாதமளித்தவர்(கள்) மற்றும் பொதுமக்களுக்கு இந்த அறிவிப்பின் மூலம் தெரியப்படுத்தப்படுகிறது. இந்த சொத்துக்கள் 'எங்கு உள்ளதோ உள்ளபடி', 'என்ன உள்ளதோ உள்ளபடி', 'எப்படியுள்ளதோ உள்ள நிலையில்' விற்கப்படும். சொத்திற்கான குறைந்தபட்ச நிர்ணயிக்கப்பட்ட விலை மற்றும் முன் வைப்புத் தொகை கீழே பட்டியலில் உள்ள விபரப்படியாகும்.

பாதுகாக்கப்பட்ட கடன் வழங்கிய வங்கிக்குத் தெரியவந்த ஏதேனும் வில்லங்கங்கள் குறித்த விபரம் : (05.11.2026 தேதிய ஆன்லைன் வில்லங்கச் சான்றின்படி) 1. ஆவண எண்.67/2025/நீதிமன்ற உத்தரவுகள்/பதிவு தேதி : 31.07.2025/ திரு.கரேஷ்குமார், திருமதி.சிவசங்கரி, செல்வி.சிவானி மற்றும் செல்வி.சிவாஞ்சினி ஆகியோருக்கு எதிராக பிற நீதிமன்ற உத்தரவுகள். (லாட்-3க்காக : திரு.K.கரேஷ் குமார் (PAN :BBWPS7866Q) மற்றும் காலஞ்சென்ற திருமதி. K. சிவசங்கரி பெயரிலுள்ள சொத்து மட்டும்) 2.SA/1227/2025,SA/20/2026,SA/97/2026,SA/199/2026,SA/466/2026.

பாதுகாக்கப்பட்ட சொத்துக்களின் அட்டவணை

கிளையின் பெயர் மற்றும் கணக்கின் பெயர் மற்றும் கடன்தாரர்/ உத்தரவாதமளித்தவர்கள் பெயர் மற்றும் விலாசம்	பிணையப்பட்ட அசையாச் சொத்து விபரம் / உரிமையாளரின் பெயர் (சொத்தின் அடமானதாரர்/கள்)	அ) 2002 சர்பாஸி சட்டத்தின் பிரிவு 13(2)ன் படியான கேட்பு அறிவிப்பு தேதி ஆ) நிலுவைத் தொகை இ) 2002 சர்பாஸி சட்டத்தின் பிரிவு 13(4)ன் படியான சுவாதீனம் எடுத்த தேதி ஈ) சுவாதீனத்தின் தன்மை அடையாளம் / கொள்நிலை/ஆக்கபூர்வ சுவாதீனம்	1) ரிசர்வ் விலை 2)முன்வைப்புத் தொகை (EMD) 3) ஏல மடங்குத் தொகை
கிளை : பொள்ளாச்சி (ID : 142810) (குறிப்பு கோயம்புத்தூர் ARMBக்கு மாற்றப்பட்டுள்ளது) **M/s.SSS குளோபல் கடன்தாரர் : M/s.SSS குளோபல், உரிமையாளர் :** திரு.K.கரேஷ் குமார், எண்.139/3B, திப்பம்பட்டி கிராமம், பொள்ளாச்சி, கோயம்புத்தூர் - 642 007. **மேலும் : உரிமையாளர் :** திரு.K.கரேஷ் குமார், எண்.31, 1வது தளம், ஆண்டனி காம்ப்ளக்ஸ், வெங்கடேசா காலனி, பொள்ளாச்சி, கோயம்புத்தூர் - 642 007. **கடன்தாரர்/அடமானதாரர் :** திரு.K.கரேஷ் குமார் (M/s.SSS குளோபல்-ன் உரிமையாளர்), த/பெதிரு.காளிமுத்து, எண்.68, ஆரோக்கியநாதர் வீதி, பொள்ளாச்சி, கோயம்புத்தூர் - 642 001. **கடன்தாரர்/அடமானதாரர் :** திரு.K.கரேஷ் குமார், (M/s. SSS குளோபல்-ன் உரிமையாளர்), (சட்டபூர்வ வாரிசுதாரர் மற்றும் காலஞ்சென்ற திருமதி.சிவசங்கரியின் கணவர் - M/s.SSS குளோபல்-ன் உத்தரவாதமளித்தவர்/ அடமானதாரர்), த/பெதிரு.காளிமுத்து, எண்.34, ரத்தின விநாயகர் கோவில் வீதி, வெங்கடேசா காலனி, பொள்ளாச்சி, கோயம்புத்தூர் - 642 001. **உத்தரவாதமளித்தவர்/ அடமானதாரர் :** திரு.K.மோகன் பிரகாஷ், த/பெதிரு.குப்புசாமி, 3/126, குப்பயாண்டிபுதூர், ஊஞ்சவேலம்பட்டி கிராமம், பொள்ளாச்சி, கோயம்புத்தூர் - 642 003. **உத்தரவாதமளித்தவர்/ அடமானதாரர் :** திரு.காளிமுத்து, த/பெதிரு.மாரிமுத்து, எண்.49, பொன் நகர், வடுகபாளையம், பொள்ளாச்சி, கோயம்புத்தூர் - 641 035. **செல்வி.S.சிவானி (மைனர், மகள் மற்றும் காலஞ்சென்ற திருமதி. சிவசங்கரியின் சட்டபூர்வ வாரிசுதாரர் - M/s.SSS குளோபல்-ன் உத்தரவாதமளித்தவர்/ அடமானதாரர்) பிரதிநிதியாக இயற்கைப் பாதுகாவலர் திரு.K.கரேஷ் குமார்,** எண்.34, ரத்தின விநாயகர் கோவில் வீதி, வெங்கடேசா காலனி, பொள்ளாச்சி, கோயம்புத்தூர் - 642 001. **செல்வி.S.சிவாஞ்சினி, (மைனர், மகள் மற்றும் காலஞ்சென்ற திருமதி. சிவசங்கரியின் சட்டபூர்வ வாரிசுதாரர் - M/s.SSS குளோபல்-ன் உத்தரவாதமளித்தவர்/ அடமானதாரர்) பிரதிநிதியாக இயற்கைப் பாதுகாவலர் திரு.K.கரேஷ் குமார்,** எண்.34, ரத்தின விநாயகர் கோவில் வீதி, வெங்கடேசா காலனி, பொள்ளாச்சி, கோயம்புத்தூர்-642001. **திருமதி.K.இந்திராணி, (தாயார் மற்றும் காலஞ்சென்ற திருமதி. சிவசங்கரியின் சட்டபூர்வ வாரிசுதாரர் - M/s.SSS குளோபல்-ன் உத்தரவாதமளித்தவர்/ அடமானதாரர்),** எண்.34, ரத்தின விநாயகர் கோவில் வீதி, வெங்கடேசா காலனி, பொள்ளாச்சி, கோயம்புத்தூர்- 642 001	**(அட்டவணைச் சொத்து) :** **லாட் 1 : திரு.K.மோகன் பிரகாஷ் பெயரிலுள்ள சொத்து (BKAPM3144G)** : கோயம்புத்தூர் பதிவு மாவட்டம், பொள்ளாச்சி சார் பதிவு மாவட்டம், பொள்ளாச்சி தாலூகா, ஊஞ்சவேலம்பட்டி கிராமத்தில், க.ச. எண்.122/2G4ல் உள்ள புன்செய் எக்டர் 0.27.00 (புன்செய் ஏக்கர் 0.67) நிலம், க.ச.எண்.209/B1ல் உள்ள புன்செய் எக்டர் 0.37.00 (புன்செய் ஏக்கர் 0.91) நிலம், க.ச. எண்.213/A3ல் உள்ள புன்செய் எக்டர் 0.43.50 (புன்செய் ஏக்கர் 1.07) நிலம், க.ச. எண்.153/C3B1ல் உள்ள புன்செய் எக்டர் 0.27.50 (புன்செய் ஏக்கர் 0.68) நிலம், க.ச. எண்.153/C2B2ல் உள்ள புன்செய் எக்டர் 0.23.00 (புன்செய் ஏக்கர் 0.57) நிலம், க.ச.எண்.215/A1Bயில் உள்ள புன்செய் எக்டர் 0.10.12 (புன்செய் ஏக்கர் 0.25) நிலம். ஆக அனைத்தும் மொத்தம் புன்செய் எக்டர் 1.66.10. (புன்செய் ஏக்கர் 4.10) மற்றும் க.ச.எண்.215ல் உள்ள கிணறு வசதியுடன் பிற இணைப்புகள் சேர்ந்த சொத்தில் திரு. K. மோகன் பிரகாசுக்கு 1.41.12 எக்டர் புன்செய் ஏக்கர் 3.49) நிலம் அவரது தாயார் மாணிக்கத்துக்கு, பொள்ளாச்சி சார் பதிவகத்தில் கோப்பு தானத்தீர்வு ஆவணமாக 10.04.2018ல் ஆவண எண்.3452/2018ன் படி தீர்வு செய்யப்பட்டது போக தற்போது மீதம் உள்ள க.ச.எண்.122/2G4ல் உள்ள 0.27.00 எக்டர் புன்செய் (0.67 ஏக்கர் புன்செய்) நிலத்தின் **எல்லைகள்** : ஊர்ந்தம், வேலுசாமி கவுண்டர் வீட்டு நிலம் மற்றும் க.ச.எண்.116ல் உள்ள நிலங்களுக்கு வடக்கு, (122/2G3ல் உள்ள) வெங்கடாச்சல கவுண்டர் சொத்துக்குத் தெற்கு, க.ச. எண்.122/C (122/Cயில் உள்ள நிலங்களுக்குக் கிழக்கு, தென்வடல் ரோட்டுக்கு மேற்கு. இதனுட்பட்ட மொத்தம் புன்செய் ஏக்கர் 0.62 (அல்லது) புன்செய் எக்டர் 0.25.00 நிலம் (உண்மை கள ஆய்வின் படி 5.0 சென்ட் நிலம் க.ச.எண்.122/2G4ல் பிறருக்குச் சொந்தமாகவும், க.ச.எண்.123ல் உள்ள தென்வடல் ரோட்டிலும் அடங்கும்). **அட்சரேகை மற்றும் தீர்க்கரேகை ஒருங்கிணைப்புகள் : 10.667270, 77.057425** **லாட் 2 : திரு.K.கரேஷ் குமார் பெயரிலுள்ள சொத்து (BBWPS7866Q)** : கோயம்புத்தூர் பதிவு மாவட்டம், பொள்ளாச்சி சார் பதிவு மாவட்டம், பொள்ளாச்சி தாலூகா, பொள்ளாச்சி நகரம், வெங்கடேசா காலனி, ரத்தின விநாயகர் கோவில் வீதியில் உள்ள வீட்டுமனைப் பிரிவிலடங்கியமனை எண்.29ன் **எல்லைகள் தீர்வுருமாறு :** மனை எண்.36க்கு வடக்கு, கிழமேல் ரோட்டுக்குத் தெற்கு, மனை எண்.30க்கு மேற்கு, மனை எண்.28க்குக் கிழக்கு. **அளவுகளாக :** கிழமேல் வடபுறம் 45 அடி, கிழமேல் தென்புறம் 45 அடி, தென்வடல் கிழபுறம் 100 அடி, தென்வடல் மேல்புறம் 100 அடி ஆக மொத்தம் 4500 சதுர அடி நிலமும், அதில் தரைத்தளம், முதல் தளம் மற்றும் பிற இணைப்புகளுடன் கட்டப்பட்டுள்ள 1100 சதுர அடி கட்டடமும் சேர்ந்த சொத்து. (21.05.2025 நாள் மதிப்பீட்டு அறிக்கையின் படி கட்டட அங்கீகாரம் கிடைக்கப் பெறவில்லை) பழைய கதவு எண்.29, புதிய கதவு எண்.34, சொத்து வரி விதிப்பு எண்.3557, 3558, குடிநீர் இணைப்பு எண்.1052, டவுன் சர்வே எண்.6/5B, வார்டு 5, பிளாக் எண்.15, டவுன் சர்வே எண்.1004ல் உள்ள சொத்து. (ஆவண எண்.7375/2017 நாள் 06.09.2017ன் படியானது). **அட்சரேகை மற்றும் தீர்க்கரேகை ஒருங்கிணைப்புகள் : 10.666083, 77.004750** **லாட் 3 : திரு.K.கரேஷ் குமார் (PAN :BBWPS7866Q) மற்றும் காலஞ்சென்ற திருமதி. K. சிவசங்கரி பெயரிலுள்ள சொத்து (PAN:CAJPS2611C)** *** : கோயம்புத்தூர் பதிவு மாவட்டம், பொள்ளாச்சி சார் பதிவு மாவட்டம், பொள்ளாச்சி டவுன் சர்வே வார்டு எண்.7, பிளாக் எண்.8, டவுன் சர்வே எண்.443ல் உள்ள 7.10½ ஏக்கர் நிலம், டவுன் சர்வே எண்.859ன் பகுதி மற்றும் டவுன் சர்வே எண்.860ன் பகுதியிலுள்ள 1.46 ஏக்கர் நிலம் வீட்டுமனைகள் பல கொண்ட ஒரு வீட்டுமனைப் பிரிவாக்கப்பட்டு, நகர் மற்றும் ஊரமைப்பு திட்டமிடல் துறை அங்கீகார எண்.62/2007ன் படி அங்கீகரிக்கப்பட்டு "பொன் நகர்" எனப் பெயரிடப்பட்டது. இதிலடங்கிய மனை எண்.14ன் **எல்லைகள் வருமாறு :** 40 அடி கிழமேல் ரோட்டுக்கு வடக்கு, மனை எண்.42 மற்றும் 48க்கு தெற்கு, மனை எண்.41க்குக் கிழக்கு, மனை எண்.50க்கு மேற்கு. இதன் **அளவுகளாக :** கிழமேல் வடபுறம் 40 அடி, கிழமேல் தென்புறம் 40 அடி, தென்வடல் மேல்புறம் 77 அடி 9 அங்குலம், தென்வடல் கிழபுறம் 77 அடி ஆக மொத்தம் 3095 சதுர அடி (287.53 சதுர மீட்டர்) நிலத்துடன் அதில் கட்டப்பட்டுள்ள கட்டிடங்கள் ஏதேனுமிருப்பின் அவையும், பிற அனைத்து நடப்பு உரிமைகளும் சேர்ந்த சொத்து. (ஆவண எண்.2735/2008 நாள் 16.04.2008ன் படியானது). **அட்சரேகை மற்றும் தீர்க்கரேகை ஒருங்கிணைப்புகள் : 10.670222, 76.992944** **லாட் 4 : திரு.M.காளிமுத்து பெயரிலுள்ள சொத்து (PAN : AYRPK5172G) :** கோயம்புத்தூர் பதிவு மாவட்டம், பொள்ளாச்சி சார் பதிவு மாவட்டம், பொள்ளாச்சி டவுன் சர்வே வார்டு எண்.7, பிளாக் எண்.8, முன்னாள் டவுன் சர்வே எண்.443ல் 7.10½ ஏக்கர், பின்னர் டவுன் சர்வே எண்.443/1 மற்றும் 443/2, தற்போதைய புதிய டவுன் சர்வே எண்.859ன் பகுதி மற்றும் டவுன் சர்வே எண்.860ன் பகுதியில் அடங்கிய 1.46 ஏக்கர் நிலம் வீட்டுமனைகள் பல கொண்ட ஒரு வீட்டுமனைப் பிரிவாக்கப்பட்டு, நகர் மற்றும் ஊரமைப்பு திட்டமிடல் துறை அங்கீகார எண்.62/2007ன் படி அங்கீகரிக்கப்பட்டு "பொன் நகர்" எனப் பெயரிடப்பட்டது. இதிலடங்கிய மனை எண்.49ன் **எல்லைகள் வருமாறு :** 40 அடி கிழமேல் ரோட்டுக்கு வடக்கு, மனை எண்.42 மற்றும் 48க்கு தெற்கு, மனை எண்.41க்குக் கிழக்கு, மனை எண்.50க்கு மேற்கு. இதன் **அளவுகளாக :** கிழமேல் வடபுறம் 40 அடி, கிழமேல் தென்புறம் 40 அடி, தென்வடல் மேல்புறம் 77 அடி 9 அங்குலம், தென்வடல் கிழபுறம் 77 அடி ஆக மொத்தம் 3095 சதுர அடி நிலத்துடன் அதில் கட்டப்பட்டுள்ள கட்டிடங்கள் ஏதேனுமிருப்பின் அவையும், பிற அனைத்து நடப்பு உரிமைகளும் சேர்ந்த சொத்து. (ஆவண எண்.2735/2008 நாள் 16.04.2008ன் படியானது). **அட்சரேகை மற்றும் தீர்க்கரேகை ஒருங்கிணைப்புகள் : 10.670222, 76.992944**	**அ) 07.07.2025** **ஆ) (1) M/s.SSS குளோபல் பெயரிலுள்ள நடப்பு கணக்கு - 439300IL00000569 : 31.10.2026 தேதி அன்று - ரூ.11,51,217.54 (01.11.2026 தேதியிலிருந்து** மேற்படி மற்றும் பிற செலவுகளுடன்) **(2) திரு.கரேஷ்குமார் மற்றும் காலஞ்சென்ற திருமதி.S.சிவசங்கரி பெயரிலுள்ள டெர்ம் லோன் - 439300NC00071932 : 31.10.2026 தேதி அன்று - ரூ.95,79,076.27 (01.11.2026 தேதியிலிருந்து** மேற்படி மற்றும் பிற செலவுகளுடன்) **(3) திரு.M.காளிமுத்து மற்றும் திரு.கரேஷ்குமார் பெயரிலுள்ள டெ